**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 32/2019**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **21.11.2025** |
| **பெயர்** | **மோகனவிக்னேஷ்** |
| **த/பெ** | **ஜெகதீஷன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.24. பி.எம்.**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கை 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளின் மீது தாக்கல் செய்துள்ளோம். நான் திருவொற்றியூர் கிராமத் தெருவில் வசிக்கிறேன். 1–ம் வாதி என் தாயார். என் தாயாருக்கு 63 வயது. வீட்டில் தான் உள்ளார். என் தாயார் நீதிமன்றத்திற்கு சாட்சயிம் அளிக்க வரவில்லையா என்றால் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வர இயலவில்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை அதனால் அவர் சாட்சயிம் அளிக்க வரவில்லை என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. என் தந்தையின் பூர்வீகம் திருவொற்றியூர். என் தந்தை என்ன வேலை செய்தார் என்றால் ஷிப்பிங் மற்றும் கிளினிங் (Shipping and Cleaning) 1ம் பிரதிவாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது ஆவணத்தில் ஆவடி என்று குறிப்பிட்டுள்ளது. 2ம் பிரதிவாதி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ஆவணத்தின் படி மீஞ்சூரை சேர்ந்தவர். என் படி வழக்கு சொத்து என் தந்தை வாங்கியதாக கூறியுள்ள பட்சத்தில் அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 1 வயது. என் தந்தை சொத்தை வாங்கிய போது 3–ம் மற்றும் 4–ம் வாதிகள் பிறக்கவில்லை என்றால் சரிதான். என்படி சொத்தை என் தந்தை வாங்கினார் அதன் பிறகு அவர் பட்டா மாற்றம் செய்து கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது.

3. நான் விவேகாநந்தா வித்யாலயா திருவொற்றியூரில் பள்ளி பருவம்

முடித்தேன். எனது மற்றொரு தம்பியும் அதே பள்ளி நிறுவனத்தில் தான் பயின்றான். மற்றொரு சகோதரர் திருவொற்றியூரில் உள்ள அவர்லேடீ பள்ளியில் பயின்றான். இருவரும் திருவொற்றியூரில் தான் படித்தார்கள். என் தாயார் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் தாயார் ஆங்கிலத்தில் கையொப்பம் இடுவாரா அல்லது தமிழிலா என்றால் தமிழில். என் தந்தை 13.05.1998ல் காலமானார். அவருடைய தாய் கோவிந்தம்மாள் எப்போது காலமானார் என்றால் 1999. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் மீஞ்சூரில் உள்ளது. நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

4. வழக்கு சொத்து வீட்டு மனை என குறிப்பிட்டுள்ளபோது அதற்கு ஏதேனும் பெயர் உள்ளதா என்றால் ஆவணத்தின் படி வேதாச்சல நகரில் உள்ளது. மனை எண் தெரியுமா என்றால் தெரியும் 73. அதன் விஸ்தீர்னம் என்ன என்றால் 2400 சதுர அடி. எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தபோது வழக்கு சொத்து வாதிகளிடம் இருந்து, 1-ம் பிரதிவாதிக்கும், 1-ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதிக்கும் கிரையம் செய்யப்பட்டதாக தெரியவந்தது அதனை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எந்த தேதியில் வில்லங்கம் போட்டு பார்த்தோம் என்றால் 2019. வில்லங்கம்போட்டு பார்த்தபின் விவரம் தெரிந்த பிறகு என்ன செய்தோம் என்றால் நேரடியாக வழக்கு தாக்கல் செய்துவிட்டோம்.

5. 1-ம் பிரதிவாதியை நேரடியாக சென்று கேட்டோமா என்றால் அவர் யார் என்று தெரியாத காரணத்தினால் கேட்கவில்லை. மேற்சொன்ன 1 மற்றும் 2-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பத்திரங்களின் நகலை பார்த்தோமா என்றால் பார்த்தோம். என்படி வழக்கு சொத்தை என் தந்தை யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் இராஜா என்பவரிடம் இருந்து வாங்கினார். என் தகப்பனார் வாங்கியதாக சொன்ன கிரையப்பத்திரத்தை வா.சா.ஆ 2 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சாட்சி அந்த ஆவணத்தை பார்வையிட்ட பிறகு ஆம் என்று கூறினார்.

6. இராஜா யாரிடமிருந்து வாங்கினார் என்றால் சத்தியமூர்த்தி என்பவரிடம் இருந்து வாங்கினார். அந்த மனை அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவா அல்லது அங்கீகரிக்கப்படாதா மனை பிரிவா என்றால் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு. இராஜா, சத்தியமூர்த்தியிடம் இருந்து வாங்கிய கிரைய பத்திரத்தை வா.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை முழுமையாக தாக்கல் செய்துள்ளோமா அல்லது அதில் ஏதேனும் குறைபாடுகள் உள்ளதா என்றால் முழுமையாக தான் தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ 1 பத்திரத்தை நான் முழுமையாக படித்துபார்த்துள்ளேனா என்றால் முழுமையாக படித்து பார்க்கவில்லை.

7. தாவா மனை அங்கீகரிக்கப்படாத மனை தான் என்றால் எனக்கு தெரிந்து தாவா மனை டி.டி.சி.பி–யால் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு தான். வா.சா.ஆ 1 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதன் சொத்து விவரத்தில் பிளானில் கண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ 1 –ல் அவ்வாறு பிளான் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என் தாயாரின் கையொப்பம் போல் உள்ளது ஆனால் தாயாருடையது அல்ல. என்படி என் தாயார் 1–ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9 ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்தில்லை.

8. வா.சா.ஆ 9 ஆவணத்தில் என் தாயார் கையொப்பம் போட்டதாகவும், இடது கைரேகை வைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயாரின் கைரேகையயும் வா.சா.ஆ 9–ல் உள்ள கைரேகையும் ஒத்துப்போகுதா என்பதை நிரூபிக்க வாதிகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9 ஆவணத்தில் என்னையும் என் சகோதரர்களாக காண்பித்து என் தாயார் கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தைக்கும், ரங்கநாதனுக்கும் எந்த உறவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 9 தேதியில் தகப்பனார் இறந்துவிட்டதாகவும் அவருக்கு என் தாயரும், நானும், என் சகோதரர்களும் வாரிசுகள் என்கிற விவரம் 1–ம் பிரதிவாதிக்கு எப்படி தெரியும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

9. வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ 2 ஆவணங்கள் காணாமல் போய்யிருந்ததா அல்லது தொடர்ந்து வாதிகளிடம் தான் இருந்ததா என்றால் வாதிகளிடம் தான் இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் யாரடையது என்றால் என் தாயாருடையது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 12.56. பி.எம்.**